இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 10 | இதழ் : 38 | மே | 2024 | Vol.: 10 | Issue: 38 | May | 2024

இறையடியானின் அகிலப் பேரொளி (இறைமகன் இயேசுவின் நவீன பாவிகம் - கன்னட மொழிபெயர்ப்பு) IRAIYADIYANIN AKILA PEROLI(Christ Jesus' Modern poems – Translated in Kannada)

முனியசாமி சே I Muniyasamy S[1] ORCID

[1]தமிழ் உதவிப்பேராசிரியர், மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, பசுமலை, மதுரை-625004, +919786089440, muniyasethu@gmail.com
DOI: 10.5281/zenodo.11315863

ஆய்வுச்சுருக்கம் (Abstract)

தாஸ் எனும் இயற்பெயர் கொண்ட இறையடியான் பெங்களூரைச் சேர்ந்தவர். கன்னடத்தில் இருந்து தமிழுக்குப் பல நூல்களை மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார். சுமார் 25 ஆண்டுகளாய் கன்னடம்-தமிழ் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர். 2019 ஆம் ஆண்டு பெங்களூர் அன்னபூர்ணா பதிப்பகத்தாரால் 'அகிலப் பேரொளி' என்னும் நூல் வெளியிடப்பட்டது. இந்நூலின் மூல ஆசிரியர் பி.எஸ்.தளவாடி. கன்னட மூலத்தைத் தமிழில் இறையடியான் மொழிபெயர்த்துள்ளார். 887 பக்கங்களைக் கொண்டு திகழும் இந்நூல் வேதாகமத்தைத் (Bilble) தழுவி இன்றைய சமகால நிகழ்வுகளைச் சித்தரித்து கன்னட மக்களின் வாழ்வியலோடு இணைத்து இயற்றப்பட்டதாகும். இந்நூலை அறிமுகப்படுத்தி விளக்கும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

Irayadiyan who is called as Doss, belongs to Bangalore. He has translated many books from Kannada to Tamil. He has been in the field of translation for approximately 25 years. The book 'Akilaperoli was published by Annaporna publications in the year 2019. The author of the source book is P.S. Thalavadi and it was translated in Tamil by Irayadiyan.

This book has 887 pages which depictes the life of the present events relating to the Bible, connecting the life style of Kannaada people. This article is based on introducing and explaining the book "Akilaperoli".

திறவுச்சொற்கள் (Keywords): அகிலப் பேரொளி, ஸ்ரீ புவன சோதி, இறையடியான், பி.எஸ்.தளவாடி, இயேசுவின் நவீன பாவிகம்

நூலுக்கு எழுந்த உரைகள்

ஆசியுரை, அணிந்துரை, ஆசிரியர் உரை, ஆக்கியோன் உரை என நூல் பற்றியும், நூலின் சிறப்பையும், நூல் எழுந்த காரணத்தையும், நூலின் தேவையையும், மொழிபெயர்ப்புச் சிக்கல்களையும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

ஆசியுரை

பெங்களூரைச் சேர்ந்த பாதிரி பிரபாகர் என்பவர் நூலின் தொடக்கமாக ஆசியுரை வழங்கியுள்ளார். கிறிஸ்தவர்களின் ஜீவநூல் வேதாகமம் (Bible) ஆகும். இந்நூல் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என இரு பெரும் பிரிவுகளையுடையது. பழைய ஏற்பாட்டில் 39 பகுதிகளும், புதிய ஏற்பாட்டில் 27 பகுதிகளும் என 66 பகுதிகளைக் கொண்டு திகழ்கின்றது. இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு முன் எழுதப்பட்டது பழைய ஏற்பாடு. இயேசு கிறிஸ்து பிறந்தபின் எழுதப்பட்டது புதிய ஏற்பாடாகும்.

கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே ஏற்பட்ட ஓர் உடன்படிக்கைதான் பைபிளென ஆசியுரையில் சுட்டியுள்ளார். பொதுவாகக் கடவுளின் நற்செய்தியை உள்ளடக்கிய நூல் மட்டுமல்ல பைபிள். அது பண்பாட்டின் விழுமியம் என்ற கருத்தினையும் முன்வைக்கின்றது. **"பன்முக பண்பாடுகள், பன்மொழிகளின் நுட்பமான விவரங்களோடு இறையடியானின் நுண்மான் நுழைபுல அனுபவத்தில் 'அகில பேரொளி' என்கிற இந்த நூல் கடைத்தெடுக்கப்பட்ட சிற்பமாகி உள்ளது."** எனக் குறிப்பிடுகின்றார். (அகிலப் பேரொளி, ப.iii)

அணிந்துரை

மதுரை நொபிலி அருட்பணி மையத்தின் இயக்குநர் மதுரை ஆனந்த் இந்நூலுக்கு அணிந்துரை அளித்து அழகுபடுத்தியுள்ளார். கம்பராமாயணம் தொடங்கி மணிமேகலை, சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் ஆகிய தமிழ்ப் பெருங்காப்பியங்கள் இறைமைப் பொருளைப் பாடும் கற்பனைக் களஞ்சியங்களாக அமைந்துள்ளன. இவை ஒவ்வொரு தலைமுறையினராலும் படித்து ரசிக்கப்படுகின்றன. இவை சொல்லும் கருத்துக்களும், சித்தாந்தங்களும் உள்வாங்கப்படுகின்றன எனத் தமிழ்மொழி இலக்கியங்களில் இறைத்தன்மையோடு சுட்டுகின்றார். அதேபோல் இயேசுவின் 12 சீடர்களில் ஒருவரான புனித தோமையார் 17 ஆம் நூற்றாண்டில் தமிழகம் வருகை புரிந்த பின்னர்தான் கிறிஸ்தவம் தொடர்பான மறைக்கல்வி, தத்துவ இலக்கியங்கள் உருவாகின. ராபர்ட் தே நொபிலி, வீரமாமுனிவர் ஆகிய இருவரும் தமிழ்க்கிறிஸ்தவ இலக்கிய முன்னோடிகளாகவும், பிதாமகன்களாகவும் அமைகின்றனர். இவர்களின் நீட்சியாக, கண்ணதாசனின் இயேசு காவியம், நிர்மலா சுரேஷின் இயேசு மாகாவியம், வின்சன்ட் சின்னதுரையின் புதிய சாசனம் போன்றவை கிறித்துவ இலக்கியங்களாக உருவெடுத்தன. இவ்வரிசையில் 'அகிலப் பேரொளி' எனும் காவியம் இடம் பெற்றுள்ளது மேலும் சிறப்பு என ஆசிரியரைப் பாராட்டி இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்.

ஆசிரியர் உரை

கன்னட மூலத்தில் 'ஸ்ரீபுவன சோதி' என்னும் நூலை இயற்றிய பி.எஸ்.தளவாடி 1956 ஆம் ஆண்டுக்கு முன்பு தமிழகப் பகுதிகளில் வலம் வந்துள்ளார். இவர் தமிழ்க்காப்பியங்கள் மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். சிலம்பையும், இராமாயணத்தையும் சிறுவயதில் கேட்டு வளர்ந்ததால் இவருக்கு இலக்கியத்தினுள் தனிப்பட்ட ஈர்ப்பு ஏற்பட்டுள்ளது. நான்காம் வகுப்பு வரை மட்டும் தமிழ் படித்த பி.எஸ்.தளவாடிக்கு தமிழ்க் காவியம் ஒன்றைப் படைத்திட வேண்டும் என்ற பேராசை உதித்துள்ளது. இருப்பினும் கன்னடத்திலிருந்த இலக்கியப் புலமை தமிழ்மொழியில் இல்லாததால் வெற்றுக் கனவாய் மாறியது எனக் குறிப்பிடுகின்றார். 'ஸ்ரீபுவன சோதி' என்னும் மாபெரும் நூல் எழுந்தமைக்கான முக்கியக் காரணங்களை தன்னுடைய உரையில் ஆசிரியர் முன்வைக்கின்றார்.

- சிலப்பதிகாரம், கம்பராமாயணம் ஆகிய தமிழ் நூல்களின் அறிமுகம் ஒரு புறமும், குவெம்பு அவர்களின் 'ஸ்ரீ ராமாயணத் தரிசனம்' கன்னடக் காவியம் எனும் இருபெரும் படைப்புகளே 'ஸ்ரீபுவன சோதி' எனும் நூல் எழுதுவதற்கு அடிப்படையானது.
- மில்டனின் பாரடைஸ் லாஸ்ட், பாரடைஸ் ரிகெய்ன் நூல்களின் வாசிப்பு.
- பல்வேறு மொழிகளில் வெளியான இயேசு காவியங்களை மாணவப் பருவத்தில் படித்தது.

இதுவரையில் அச்சில் வந்த கிறித்துவ இலக்கியங்கள்

- தோமஸ் ஸ்டீபன் பாதிரியார் கொங்கணி - மராட்டி கலந்த மொழி கன்னட வரிசை.
- 1956 ஆம் தேவநாகரி மொழியில் எழுதப்பட்டது.
- 1615 ஆம் ஆண்டு இதன் முதல் பாகம் வெளிவந்தது.

- 1649, 1654 ஆம் ஆகிய ஆண்டுகளில் இரண்டு மற்றும் மூன்றாம் பாகம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
- 1717 ஆம் ஆண்டு கிறிஸ்து பாகவதம் பாதிரி தேவாதேவசி எனும் நூல் வடமொழியில் வெளியானது இந்நூல் 3160 அடிகள் கொண்டதாகும்.
- 1846 ஆம் ஆண்டு இயேசு காவியம் சௌத்ரி புருஷோத்தமனால் தெலுங்கு மொழியில் வெளியானது.
- 1845 ஆம் ஆண்டு இயேசு கிறிஸ்து பிரபு சதகம் எனும் நூல் வெளியானது.
- 1946 ஆம் ஆண்டு ரக்ஷணா சரித்ரா எனும் நூல் வெளியானது.
- 1845 ஆம் ஆண்டு முக்தி மார்க்க பிரதர்ஷனம் எனும் நூல் வெளியானது.
- ஸ்ரீ கிறிஸ்தவ கீதா (குறுங்காவியம்) தன்ச்சிபாயி பகீரபாய் எனும் நூல் வெளியானது.
- த மான் வூ நெவர் பெய்ட்டு, டாக்டர் கோபால் சிங் சீக்கியப் புலவர் (ஆங்கில நூல்) எனும் நூல் வெளியானது.
- கொல்கோதா, கோவிந்தபை (குறுங்காவியம்) எனும் நூல் வெளியானது.
- உம்மாள துங்க, டாண்டே வெர்ஜில் பாதிரி அர்னுஸ் (மலையாளம்) எனும் நூல் வெளியானது.
- 1746 ஆம் ஆண்டு தேம்பாவணி வீரமாமுனிவரால் வெளியானது.
- இயேசு காவியம், கண்ணதாசன் வெளிவந்தது.

மேற்சுட்டிய நூல்கள் கிறிஸ்து பற்றி எழுந்த இலக்கிய நூல்களாகும். இயேசுவைப் பற்றி தமிழில் மட்டும் 32 காவியங்கள் வெளியாகியுள்ளன. இதுவே தமிழ்மொழிக்குச் சிறப்பாகும். **"இவைகள் அனைத்தும் இந்தியப் பண்பாட்டினை உள்ளடக்கியதோடு உள்ளூர் மக்களின் பரம்பரை பரம்பரையான சம்பிரதாயங்களைக் கொண்டிருந்தன என்பது கவனத்திற்குரியது. இங்குள்ள கிறிஸ்தவர்கள் முதலில் இந்தியர்கள், இரண்டாமாகத்தான் அவர்கள் கிறிஸ்தவர்கள் என்பதை மறக்கக் கூடாது. இயேசு மேனாட்டவராயினும் அவர் ஆசியாவில் பிறந்தார் என்பதை மறக்கக்கூடாது"** என தன்னுடைய ஆசிரியர் உரையில் குறிப்பிடுகின்றார் (அகிலப் பேரொளி, ப.9)

மூல ஆசிரியரின் தமிழ்ப்பற்று

இந்நூலைப் படைக்கும்போது கன்னட நாட்டின் பரம்பரையை உள்ளீடாகக் கொண்ட இந்திய கிறிஸ்துவ வாசகர்களுக்கு அறிமுகம் செய்கிறேன் எனவும், கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்தே தமிழானது திராவிட மொழிகளின் மூத்த மொழி, அந்த மொழியின் மகாகாவியம் மொழிபெயர்ப்பாகிருப்பது தமிழன்னையின் கருணை என்பது என் நம்பிக்கை எனத் தமிழ்மொழி மீது பற்றுடையவராகவும், மரியாதை கொண்டவராகவும் மூலநூல் ஆசிரியர் திகழ்ந்துள்ளார் என்பது புலப்படுகிறது.

நூல் எழக் காரணம்

ஜேம்ஸ் அருள்தாஸ் தொட்ட காஜனூர் என்னும் பகுதிக்குக் கிறித்துவ சேவையாற்ற வந்திருக்கையில், அவருக்கு உதவி செய்ய உடனிருந்தேன். அவருடன் பயணித்ததால் தமிழில் பேசிப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. என் வழியாக இலக்கிய நூல்கள் வெளிவர வேண்டும் என அவர் ஆவல் கொண்டதின் வாயிலாக இந்நூல் எழுதினேன். தற்போது ஜேம்ஸ் அருள்தாஸ் இம்மண்ணுலகில் இருந்திருந்தால் ஸ்ரீ புவன சோதியைக் கண்டு மகிழ்ந்திருப்பார் என வருத்தத்துடன் பதிவு செய்துள்ளார். **"மனித உள்ளங்களில் மதக் கேடுகளுக்கு இடமளிக்காமல் மனநலத்துடன் விளங்க வைக்க முடியும். இந்தக் கண்ணோட்டத்தில் 'அகிலப் பேரொளி' அனைவருக்கும் போய்ச் சேர வேண்டுமென எழுதினேன்"** என தனது ஆசிரியர் உரையில் குறிப்பிடுகின்றார். (அகிலப் பேரொளி, ப.9)

மொழிபெயர்ப்பாளரை வாழ்த்துதல்

இயேசுவைப் பற்றிய பெரிய காவியம் தமிழ்க் கிறிஸ்தவர்களின் கரங்களைச் சென்றடைய வேண்டுமென இவ்வளவு பெரிய நூலைப் பதினெட்டே மாதங்களில் இறையடியான் மொழிபெயர்த்துள்ளார். கன்னடம் மூலம் 1200 பாக்கள் கொண்ட நூலைப் படித்து அருமையாய் மொழிபெயர்த்த நிலையினை எண்ணி நினைக்கையில் மொழியின் மீதும் மொழிபெயர்ப்பின் மீதும் அவர் கொண்டுள்ள ஈடுபாடு அளப்பரியது என்பேன் என இறையடியானை வாழ்த்திக் குறிப்பிட்டுள்ளார்.

பி.எஸ்.தளவாடி இயற்றிய 'ஸ்ரீ புவன சோதி' எனும் கன்னட நூலைக், கன்னட மொழி பேசுகின்ற மக்களுக்கு மட்டும் பயன்படும்படி நிறுத்திக் கொள்ளாமல் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை இலக்கியத்தைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்தே தீர வேண்டும் என்ற சிந்தனையானது பாராட்டுதலுக்குரியது. அதுமட்டுமின்றி இளமையில் அவர் கற்றறிந்த தமிழ் இலக்கியங்களே இதற்குக் காரணம் என்றே கூறலாம்.

பி.எஸ்.தளவாடி நூலுக்கு ஆசிரியர் உரை வழங்கிய நாள் 13.6.2019 ஆகும். இந்நாள் புனித தோமையார் பிறந்தநாள் எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றைப் பார்க்கும்போது கிறித்துவத்தின் மீதும் கிறிஸ்தவ சீடரான புனித தோமையார் மீதும் அவர் கொண்டிருந்த அதீத பற்றை நாம் காணமுடிகிறது.

மொழிபெயர்ப்பாளர் உரை

கடந்த 25 ஆண்டுகள் பல்வேறு சிறுகதை, கவிதை, கட்டுரை, புதினம், இலக்கியங்களை மொழிபெயர்த்துச் சிறப்பித்திருப்பினும், கிறித்துவ மத நூல் ஒரு சவாலாக இருந்துள்ளது என இறையடியான் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

கிறித்துவத்துக்கும் தனக்குமான உறவுநிலையினை விளக்க முற்படுகையில், அமாவாசைக்கும், அப்துல் காதர்க்கும் என்ன தொடர்பு எனக் கேட்பது வழக்காறு. கண்ணதாசனுக்கும் இயேசு காவியத்திற்கும் உள்ள உறவு போன்றதே என் நெருக்கம் எனக் குறிப்பிடுகின்றார். கிறிஸ்துவத்திற்கும் தனக்குமான நெருக்கத்தை கீழ்வுள்ளவாறு குறிப்பிடுகின்றார்.

- ❖ ஈஸ்டர் பண்டிகையின் முதல்நாள் இரவு பூங்காவனம் நிகழ்ச்சியை எமது ஊரிலுள்ள தூய மரிய கொரற்றி சிற்றாலயத்தில் இரவு தொடங்கி விடியும் வரையில் நடத்திய பின்புலமும் எனக்குண்டு.
- ❖ இயேசுவின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான கதைப்பாடலாக ஒரு வித்தியாசமான நிகழ்ச்சியாக சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்வு இன்றும் எனக்கு பசுமரத்தாணி போல நினைவில் இருக்கிறது.
- ❖ மரிய கொரற்றி சிற்றாலயத்தின் பொன்விழா நிகழ்ச்சிக்காக அன்னை மரிய கொரற்றியின் வாழ்க்கைச் சித்திரத்தைப் பாடலாக்கி ஒலிப் பேழையாகக் கொண்டு வந்ததில் என் பங்கு இருந்தது.

எனக் கிறித்துவ சமயத்தினுள் தான் ஆற்றிய பங்களிப்பினை எடுத்துரைக்கையில் கிறித்துவ சமயத்தைப் பற்றிய புரிதலுடையவராகத் தென்படுகின்றார்.

இதுவரை பைபிள் மொழிபெயர்ப்புகளைக் கால அடிப்படையிலும் மொழிகளின் அடிப்படையிலும் இறையடியான் எடுத்தியம்பியுள்ளார்.

புனித நூல்களின் மொழிபெயர்ப்பில் பைபிளுக்கு முதலிடம் உண்டு. கி.பி.1 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சீசர், ஹோரஸ் ஆகிய இருவரின் மொழிபெயர்ப்புத்தான் உலகில் முதல் மொழிபெயர்ப்பாகும். இவர்களைப் பின்பற்றி கி.பி.4-5 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெரோம் எபிரேயத்திலிருந்து இலத்தீனுக்கு மொழிபெயர்த்து, ரோம் நகரின் மிகச் சிறந்த கிறிஸ்துவ அறிஞராகவும், போப்பின் செயலாளராகவும் செயலாற்றியுள்ளார். எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மும்மொழிகளிலும் புலமைப் பெற்றமையினால் இவரின் நினைவாக

செப்டம்பர் 30 ஆம் நாளை உலக முழுவதும் மொழிபெயர்ப்பு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

- கி.பி.1 ஆம் நூற்றாண்டிலிருந்து நவம்பர் 2014 ஆம் ஆண்டு வரையிலும் 531 மொழிகளில் பைபிள் முழுமையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- பைபிளில் புதிய ஏற்பாடு 1240 மொழிகளில் வெளியாகியுள்ளது.
- பைபிளின் சில பகுதிகள் மட்டும் 2883 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- 1997 ஆம் ஆண்டு நவம்பரிலிருந்து 2014 நவம்பர் வரையிலான ஆண்டுகளில் மட்டும் 221 மொழிகளில் முழுமையாகவும், 1286 மொழிகளில் சில பகுதிகளாகவும் பைபிள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.
- உலக பைபிள் சங்கம் (International Bible Society) உலகிலுள்ள 7500 மொழிகளில் பைபிளை மொழிபெயர்க்கும் திட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.
- இந்திய மொழிகளில் தமிழில்தான் பைபிள் முதன்முதலில் மொழிபெயர்க்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்சுட்டிய வரலாற்றுப் பிண்ணனியின் நீட்சியாக பி.எஸ்.தளவாடியால் கன்னடத்தில் 'ஸ்ரீ புவன சோதி' என்னும் நூல் எழுதப்பட்டுள்ளது என இறையடியான் குறிப்பிடுகின்றார். குறிப்பாக இந்நூல் கன்னடத்தில் நான்கு பதிப்புகளாக வெளிவந்து புகழ் பெற்றதாகும்.

பழைய ஏற்பாட்டைத் தழுவி இன்றைய நிகழ்வுகளை மூல ஆசிரியர் சித்திரித்துள்ளார். அவர் பின்பற்றியதுபோல பழமையைப் புறக்கணிக்காமல் இன்றைய மொழிநடைக்கேற்ப இந்நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என மொழிபெயர்ப்பாளர் இறையடியான் குறிப்பிடுகின்றார். இந்நூலைத் தமிழில் மொழிபெயர்க்க வாய்ப்பளித்த மூலநூலாசிரியர் பி.எஸ்.தளவாடிக்கும், வாழ்த்துப்பா நல்கியவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துள்ளார்.

நூல் அமைப்பு

இந்நூலானது மூன்று பருவங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1. **ஆதாம் பருவம்**
2. **அகிலப் பேரொளி பருவம்**
3. **பரஞ்சோதி கிறிஸ்து முனிவர் பருவம்**

1.ஆதாம் பருவம்:

இப்பகுதியில் 13 தலைப்புகளில் உலகில் தேவன் களிமண்ணால் படைத்த முதல் மனிதனான ஆதாம் வாழ்வியலைப் பேசுவதாக அமைந்துள்ளது. உலக கவிகளின் பாதையில் நிலைக்க வைப்பீர், விடியட்டும் என்ற புனிதக்குரல், தேவ தூதர்களின் இடையே பகைமை, மந்திராலோசனையின் சபையில், பூமிக்குத் தாவிய வஞ்சகன், தெய்வ முற்றத்தில் இடறி விழுந்தாலும் வெற்றியே, மோகக் கனிக்கு எத்துனை வனப்பு?, சாபத்துக்கு ஆட்பட்ட ஆதியின் பெற்றோர்கள், உலகப் பிரளயம், மகனைக் கொல்ல முயன்றானா பக்தன், ஆண்மக்கள் இருவரையும் அவர்கள் கொல்லவில்லை, சர்வேசுவரனின் பத்துக் கட்டளைகள், தேவமகிமை வெல்லட்டும்! தேவ மக்கள் வாழட்டும்! என 13 தலைப்புகளில் இப்பருவம் அமைகின்றது.

2.அகிலப் பேரொளி பருவம்

இரண்டாவதாக அமைந்த இப்பருவத்தில் 40 தலைப்புகளில் இயேசு கிறிஸ்து ஆற்றிய இறைப்பணியையும், அற்புதங்களையும், அவரது பாடுகளையும் விளக்கி நிற்கின்றன. இரட்சகரின் விருப்பம், துக்கத்துள் கலக்கத்துள் புண்ணியவதி நீ!, தெய்வக் கருணையால் மங்களத் திருமணம், மந்திர நல்லுரையைவிட உயர்ந்த குழந்தை, மங்கலப்பாடலை வர்ணிப்பது

எங்ஙனம்!, இரவில் தோன்றியவருக்குப் பேரொளி, மழலையரின் மரணங்களில் வெங்குருதி ஊற்றெடுத்தது, ஊர் மக்களுக்கு அனுதவொளியான இயேசு, அறிவின் வடிவமான இயேசு புனிதப் பிறவியாம், குருவுக்குத் தீட்சையளித்த யோவான், செதுக்கிய சிற்பம்போல் காட்சியளித்தானோ?, சீடர்கள் பன்னிருவரை வாழ்த்துதல், மண்ணுலகோர் உன்னால் மகிழ்ச்சி துய்க்கட்டும், எந்தையின் ஆலயத்தைச் சந்தையாக்கி விடாதீர்கள், என்மக்கள் உன்மக்கள் என்பதேது?, சமேரியாவின் மகளே புண்ணியவதி நீ, அற்புதமன்று பரமாத்மாவின் கருணையது, தீதென எண்ணாமல் அன்பைப் பொழிவாய்!, கண்டனர் கண்ணிமைக்காமல் வியப்பான பணிகளை, செவிமடுத்தோரின் விமர்சனங்களுக்கு இடமளித்தார், நண்பனின் கொலைச் செய்தி, இறைவனோடு இணைந்த இரக்கமுடையோர், கருணை வள்ளலை மறந்தது, அன்பு நண்பனே எழுந்து வா, இவனுக்கு இணை இத்தரையில் வேறுயாருமிலர், இசுரவேல் அரசனுக்கு வெற்றி உண்டாகட்டும், பஸ்கா பெருவிழாவுக்கு அணியமானது சுகன்யாநகர், யூதாஸ் மனத்துள் இருந்த கனல், பஸ்கா பண்டிகையின் அமுதுண்டார் சீடரொடு, நானே அவன் நாசரேத்தின் இயேசு, புனித நீராடி புவியைப் புரக்க வந்தவன் நீதானோ!, கணவனை இயக்கிய காரிகை புரோகியுவா, நானே கலிலேயாவின் மன்னனெனத் தெரியுமா உனக்கு?, இயேசு இவர், யூதர்களின் மன்னன், தேவனே! தேவனே! என்னையேன் கைவிட்டீர்?, மரியாளின் அழுகை, எமனை வென்றவர் எழுந்து வந்தார், தரிசனம் காட்டிடுவாய் முதலில் எனக்கு, வெள்ளித் தேரில் ஏறியது என்ன மாயமோ? என 40 தலைப்புகளில் இயேசு கிறிஸ்து வாழ்வில் நடந்த சம்பவங்கள் முதல் சிலுவையில் அறையப்படுதல் வரையிலான காட்சிகளோடு இப்பருவம் அமைகின்றது.

3.பரஞ்சோதி கிறிஸ்து முனிவர் பருவம்

நிறைவாக அமைந்துள்ள இப்பருவத்தில் 11 தலைப்புகள் அமைந்துள்ளன. பேரொளியின் காட்சி, வானுலக பேரரசின் திறவுகோல், என் மந்தைகளை மேய்க்க வேண்டும், அல்பாயாவின் மத்தேயு எழுந்து வா!, இடியின் மைந்தரும் மின்னலின் மறிகளும், உறைந்த கடலின் இறந்த மீன்கள், உலகை உய்விக்கப் புனித நீராடியவர், கண்ட இடங்களில் துண்டுதுண்டாக வெட்டினர், அன்பெனும் நூல் வலை, கிறிஸ்தவரில்லாத ஊரில்லை ஏசு கிறிஸ்துயில்லாத உலகில்லை, ஆதியும் அந்தமும் நானல்ல எனும் தலைப்புகளுடன் இந்நூல் நிறைவடைகின்றது.

பா அடிகளும் அமைப்புகளும்

அகிலப் பேரொளி எனும் இந்நூல் மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பருவமான ஆதாம் பருவத்தில் 5729 அடிகளும், இரண்டாம் பருவமான அகிலப் பேரொளி பருவத்தில் 16460 அடிகளும், இறுதிப்பருவமான பரஞ்சோதி கிறிஸ்து முனிவர் பருவத்தில் 4267 அடிகளென மொத்தம் 26,456 அடிகள் உள்ளன.

ஆதாம் பருவத்தில் தொடக்கப் பாடலாக இறைவனைப் போற்றும் முகமாக இயேசுவின் நாமத்தையும், இயேசுவைப் போற்றிப் புகழ்ந்து பாடும் விதமாக அமைந்துள்ளது. இதனை,

> **"மேன்மைமிகு இயேசுவே சகாப்த நாயகனே!**
> **அமுது மயமானவனே விண்ணின் மைந்தனே!**
> **அன்னை மரியாளின் அன்புப் பாலகனே! புதல்வனே!**
> **அகிலம் போற்றும் தேவியின் புனிதனே!**
> **அவதார திலகமே கருணையின் கடலே!**
> **பரமனின் பாதக் கமலத்தில் சிரம்வைத்து**
> **தயை வேண்டுமெனத் தொழுதேன்;"** -(ஆதாம் பருவம்: 1-7)

எனும் பாடல் மூலம் அறியலாம்.

கன்னட நாட்டின் அடியார்களின் பெயர்களைச் சுட்டி, இராமாயண தரிசனமெனும் மாகாவியம் தொழுது முன்மாதிரி ஆக்கினேன். இக்காவியத்திற்கு இயேசு இறைபெருமானை கண் ஆவாய்,

வாய் ஆவாய், கன்னடியர் இதயத்தில் வைரகோபுரமாகு, உயர்ந்தோனாகு என்பதுடன் என் கால் இடறாமல் காத்தருள வேண்டுமென விண்ணப்பம் வைக்கின்றார். இதனை,

> **"மாதரசா, அரளய்யா, சவுடய்யா**
> **கின்னரி மொம்மய்யா, மோளிகே மாரய்யா**
> **மடிவாள மாச்சய்யா, சுக்கய்யா**
> **மேதார கேதய்யா, இராயசத மஞ்சய்யா,**
> **சென்ன பசவண்ணா, கொங்கின மகாதேவி**
> **கேளிகய மகாதேவி, கொட்டணத சோமம்மா,**
> **பிட்டம்மா, இலக்கம்மா, திம்மம்மா, நாகம்மா**
> **அக்கமகாதேவி போன்ற அடியார்களில் அனைவருக்கும்**
> **குலம் ஒன்றே என்றுரைத்தவனே**
> **காவிய உழவில் உழுதுவிதைத்து அணியாக்கிவிடுவாய்,**
> **அண்ணனே, பசவண்ணனே!"** -(ஆதாம் பருவம்: 95-106)

எனவும்,

> **"கன்னடியர் இதயத்தில் வைரகோபுரமாகு, உயர்ந்தோனாகு!**
> **இன்பப்பாதையில் நடக்கிற**
> **என்னை இடறிவிழாமல் செய்திடுவாய்!"** -(ஆதாம் பருவம்: 16-18)

எனும் அடிகளில் கன்னட நாட்டின் மக்களின் மனத்தில் இறைமகனாகிய இயேசு பெருமானே அமருவாயாக எனப் பாடியுள்ளார்.

அடிக்குறிப்பு

நவீன பாவிகமாய்க் காணலாகும் இம்மொழிபெயர்ப்பில் பல இடங்களில் அடிக்குறிப்புகள் சுட்டப்பட்டுள்ளன. 194, 195, 215, 216, 289, 347, 348, 352, 376, 379, 382, 414, 448, 451, 470, 472, 510, 511, 513, 538, 551, 557, 559, 572, 684, 741, 752, 803, 835, 844, 847, 860, 861 ஆகிய முப்பத்து மூன்று இடங்களில் வாசகர்கள் மற்றும் ஆய்வாளர்கள் தெளிவுறும் நோக்கில் அடிக்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. சான்றுகள் சில பின்வருமாறு:

- **வசுதை:** தேவதைகளில் ஒரு பிரிவு (ப.194),
- **ஹுலிக்கி:** அரிசி பருப்பு கலந்த உணவு (ப.215)
- **மன்றல்நிறை:** நறுமணமிக்க (ப.289)
- **மெஸ்ஸாயா:** இரட்சகன் அல்லது உலகை உய்வித்தவன், கிறிஸ்து எனப் பொருள். கிரேக்க மொழியில் 'கிறிஸ்தோஸ்' என்றால் கிறிஸ்து மற்றும் மெஸ்ஸாய எனப் பொருள் (ப.348)
- **பரிசேயர்:** மோசசு அருளிய அறக்கட்டளையைச் சம்பிரதாயமாய் வரும் நியமங்களைக் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடித்து அதனையே போதிக்கும் குழுவினர். இவர்களின் எல்லை மீறிய தூய்மையை இயேசு கண்டித்துள்ளார் (ப.376)
- **மன்னா:** பாலைவனத்தில் பயணம் செய்தபோது இசுரயேலர்களுக்கு, இறைவன் கொடுத்த உணவு. இது பொரித்த சோளம் போன்றது (ப.414)
- **சதுசேயர்:** யூதர், கலிலேயர் போன்ற ஒரு வம்சாவழியினர் (ப.470), **புங்கம்:** அம்பு (ப.472)
- **மெசியா:** இரட்சகன் அல்லது உலகக் காப்பாளன் கிறிஸ்து எனப் பொருள். கிரேக்க மொழியில் கிறிஸ்த்தோஸ் என்றால் புனித நீரில் நீராடியவன் (புனிதன்) எனப் பொருள் (ப.513) என்பன.

பன்மொழிப் பாக்களை எடுத்தியம்பல்

அகிலப் பேரொளி எனும் இம்மொழிபெயர்ப்புநூல் நவீன பாவிகத்தால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்பில் கன்னடம், பழங்கன்னடம், வடமொழி, ஆங்கிலம், தெலுங்கு, கொங்கணி ஆகிய மொழிகள் காணலாகும் பாக்களும் இடம்பெற்றுள்ளன.

கன்னடம்

பரஞ்சோதி கிறிஸ்து முனிவர் பருவம் எனும் மூன்றாம் பருவத்தில், ஆதியும் அந்தமும் நானல்ல எனும் பகுதியில் பழங்கன்னடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை,

"ஸ்ரீ ஜனர்ஜிதா சத்ய சாட்சியே
பூஜனையோக குருவே, தேவஜ
ராஜிபதனி ரவியே, சுபதவே, ஜீவனதிபதியே
தேஜதுதயவே, தேவகாந்தியே,
மூஜகன்னாதேசு நின்முக
மாஜிகொள்ளதே மூடுபக்தர ஹீருதய கமலதோளு

ஸ்ரீ மஹந்தனே, தேவதத்தனே,
சாமகர்த்தனே, ஷீத்தயக்ஞனே
நேமதந்தியனே, விஜயஷாலியே பாபரிஹரனே
பிரேமதப்தியே, மனுஜபுத்ரனே
ராமணீயகே சகனே நின்னய
நாமதுன்னதி யாரு நுடிதாரதுல ஷெளச்சிதனே" -(ஆதியும் அந்தமும் நானல்ல:330-342)

எனும் பாக்கள் வாயிலாக அறியலாம். அதேபோல், கன்னடத்தில்,

"பரம பாவன பிதகே சரணம்
பரம குரு புத்ரனிகே சரணம்
பரம பாவன ஆத்மனிகே சதசரணு சத சரணம்
சரணமமலாபதிகே சரணம்
சரணமருள ஸ்நானிகப்பகே சரணு சத சரணம்!!

தேஷனூரின் கடத பார்ஷவதோ
னிருவ சர்வேஷ்வரன் குடியோன்
ஜேஸ்ட மாசதி சுக்லபஷத தஷம் திவசதவி
உபய சங்கடகொண்டு மனதோளு
அபய வசனத நெரவ கோருத்தா
பக்தனோர்வனு பந்து நிந்தனு சஞ்சே சமயதவி!!" (ஆதியும் அந்தமும் நானல்ல:461-473)

எனும் 'சத்யவேதாம்ருதசார' எனும் காவியம் படைத்த சுவாமி அமலானந்த குருவின் வரிகளை எடுத்துக்காட்டியுள்ளார். இவர் இயேசுவின் வாழ்க்கையை கன்னட மொழியின மக்களுக்கு கன்னட மொழியில் கொண்டு சேர்த்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமஸ்கிருதம்

அகிலப் பேரொளி பருவம், செதுக்கிய சிற்பம்போல் காட்சியளித்தானோ? எனும் உட்தலைப்பில், மலையின்மீது இயேசு நாற்பது நாள் தனித்திருந்து உபவாசமிருந்தார். அப்பொழுது பிசாசு இயேசுவை சோதித்தறிய வந்திருந்தான். இயேசுவைப் பார்த்து நீ தேவனுடைய குமாரனெனில் இந்தக் கற்களை அப்பமாக மாற்று எனச் சவால் விட்டான். இதனைக் கேட்ட இயேசு, அப்பாலே

போ சாத்தனே எனக் கூறினார். அதனை எடுத்துரைக்கும் முகமாக இப்பகுதி அமைந்துள்ளது. அதனை மொழிபெயர்ப்பாளர் கன்னட வரிகளில் சுட்டிக் காட்டியுள்ளார். அதனை,

"அஸ்யதி இதி அகஹ ப்ர அனிதி
இதி பிராணஹ பரபிரம்மனே அன்னம்
அன்னமே பரபிரம்மம்" -(அகில பேரொளி பருவம்: 218-221)

"நனு வாச்சஹ பிராணபிரேரிததுவாதாட்ரண
தியானமேவ பாஷஸ்த மித்யா ஷங்க
வஸ்துத்வ விஜாரேண ததாத்துவே பி
சம்ஹிதாயாம் வாச்சஹ பிராத்யா
சத்திமன்வயவ்ய தீரே காப்யாந்தர் ஷய திசுத்தஸ்யாம்
வாக்சம்ஹிதாயமிய முயத்திருஜ்யத
இதி ஷேஷஹ" - (அகிலப் பேரொளி பருவம்: 222-229)

எனும் அடிகளில் எடுத்துக் கூறியுள்ளார்.

வடமொழியில் 'கிறிஸ்து பாகவதம்' எனும் காவியத்தை எழுதிய பி.சி.தேவசியா என்பவரின் பாடலைச் சுட்டியுள்ளார். அதனை,

"ஓம் நமோ விஷ்வபரிதா
தேவா பாபா சர்வ சமர்த!

பரமேஷ்வர சத்யவந்தா
சுவர்க புருத்விஜா ஏசநாரா!

தும் குத்திசித்திஜா தாதாரு
குருபாநிதி கருணாகரு!

தும் சர்வ சுகாஜா சாகரு
ஆதி அந்து நாடுடே!

தும் பரமானந்து சர்சுவரூபு
விஷ்வவியாபகு ஞானதீபு!

தும் சர்வகுணம் நிர்லேபு
நிர்மலு நிர்விகாரு சுவமியா!

தும் அத்ருஷ்டி தும் அவ்யக்து
சமதயாளு சர்வபிராப்து!

சர்வஞானி சர்வநித்யந்து
யெகுஜி தேவோ தும்!" (ஆதியும் அந்தமும் நானல்ல: 175-189)

எனும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

தெலுங்கு

தெலுங்கு மொழி இலக்கியப் பாடலையும் எடுத்துரைத்துள்ளார். இதனை,

“இயேசு நாயகுனி இயேசுகிறிஸ்து பிரபு
யெனு ரண்டு விதகம்பு லோனர மொதவட
ரஜியிம்பபகே வென்க ரக்ஷண சுசரித்ர
பிரகரணதீரயமுக ரஜிதமய்யே

ததநந்தரமுன விஸ்தர ரத்னாகரம்
பனு கிரந்தமொகடி செயலக்படிமே
தருவாத பஞ்சாமர பன்னமுலு வென்க
பஞ்சரத்னமு வல்லபடியே நெலமி

வெடிக முந்தட பெக்கு கீர்த்தனலு பத்ரி
கலனு ரஜியிம்படி கிறிஸ்து கருணஜேத
கடனு கிரைஸ்தவ நீதி பிரகாஷமனேடு
நீ சரித்திரம்பு ரஜியிம்ப நிஷ்டமய்ய” -(ஆதியும் அந்தமும் நானல்ல:295-306)

எனும் அடிகளில் எடுத்துக் கூறியுள்ளார்.

ஆங்கிலம்

ஆங்கில மொழி இலக்கியப் பாடலையும் எடுத்துரைத்துள்ளார். இதனை,

ஆஃப் மியான்ஸ் ஃபர்ஸ்ட் டிஸ்ஒபிடியன்ஸ்,
அண்ட் தி டிரௌட் ஆஃப் பொர்படன்,
ட்கீ ஹவுஸ் மார்டல் டேஸ்ட் பிராட்,
டெத் இண்டு தி வெர்லட் அண்ட் ஆல்,
அவர் ஓ வித், லாஸ் ஆந்ப் ஈடன்,
டெல் ஒன் கிரேட்டர் மயான் ரெஸ்ட்டோர்,
ஆங், அண்ட், ரீகெய்ன் தி பிளிஸ்ஃபுல்,
சீட், சிங், ஹவன்லி முயூஸ்..., -(ஆதியும் அந்தமும் நானல்ல:98-105)

கொங்கணி

கொங்கணி மொழியில், பழைய ஏற்பாட்டின் பகுதிகளைக் காவியமாக்கிய ‘திவ்யாம்ருதா’ எனும் நூலை எழுதிய கொங்கணி மொழி கவிஞர் ஜி.பி.மொரேயாசின் பாடலைக் கையாண்டுள்ளார். இதனை,

“ஈதேன் உத்யான் புமிர் வைகுண்ட
கீதேம் நாதம்மய் தே கோங்க்
சர்காவவய்லெம் தர்யாசார்கேம்
சுக்தம்மய் மேஷாத் ச்சாகோங்க்
திஸ்தா பாச்விசுருஷ்டி சக்பி தஞ்டாய்
ஆஹ்லாத் மதிக
புலாம் பாச்சி சுருஷ்டி சக்பி தஞ்டாய்
ஆஹ்லாத் மதிக்
புலாம் ரங்காள் பனாம் ரோசாள்
மௌவித் திசாக் ராதிக்
வாகா ஷிம்வாம் கோர்வாம் மெர்வாம்” -(ஆதியும் அந்தமும் நானல்ல:420-430)

கன்னட மூலத்தைத் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டுமென அவாக் கொண்ட மூல நூலாசிரியர் பி.எஸ்.தளவாடி விருப்பத்தை நிறைவேற்றிய இறையடியானின் மொழிபெயர்ப்புப் பணி போற்றத்தக்கது. பொறுமை என்பது மொழிபெயர்ப்பாளருக்கு முக்கிய தகுதியாகும். மிகப்பெரிய கன்னட மூலமான ஸ்ரீபுவன சோதி எனும் நூலைத் தமிழில் அழகுபட மொழிபெயர்த்துள்ள மொழிபெயர்ப்பாளர் இறையடியானின் பணி போற்றத்தக்கது. இருப்பினும் இன்றையச் சூழலில் மொழிபெயர்ப்பாளர் இறையடியான் இவ்வுலகில் இல்லாதிருப்பது கன்னட-தமிழ்ச் சமூகத்திற்கு பேரிழப்புத்தான் எனலாம்.

துணைநூற்பட்டியல்

1. தளவாடி பி.எஸ். (மூ.ஆ), இறையடியான் (மொ.ஆ), அகிலப் பேரொளி, (இறைமகன் இயேசுவின் நவீன பாவிகம்), 2019, அன்னபூர்ணா பதிப்பகம், தாசரஹள்ளி, பெங்களூரு.
2. முனியசாமி சே., இறையடியான், 2015, கலைஞன் பதிப்பகம், சென்னை.

பின்னிணைப்பு - நூல் பகுப்பு அட்டவணை

வ.எண்	பருவம் / தலைப்பு	பா அடி
	அ)ஆதாம் பருவம்	
1.	உலக கவிகளின் பாதையில் நிலைக்க வைப்பீர்	452
2.	விடியட்டும் என்றது புனிதக் குரல்	708
3.	தேவ தூதர்களின் இடையே பகைமை	882
4.	மந்திராலோசனையின் சபையில்	441
5.	பூமிக்குத் தாவிய வஞ்சகன்	301
6.	தெய்வமுற்றத்தில் இடறி விழுந்தாலும் வெற்றியே	448
7.	மோகக் கனிக்கு எத்துனை வனப்பு?	400
8.	சாபத்துக்கு ஆட்பட்ட ஆதியின் பெற்றோர்கள்	400
9.	உலகப் பிரளயம்	257
10.	மகனைக் கொல்ல முயன்றானா பக்தன்	253
11.	ஆண்மக்கள் இருவரையும் அவர்கள் கொல்லவில்லை	295
12.	சர்வேசுவரனின் பத்துக் கட்டளைகள்	672
13.	தேவமகிமை வெல்லட்டும்! தேவமக்கள் வாழட்டும்!	220
	ஆ)அகிலப் பேரொளி பருவம்	
14.	இரட்சகரின் விருப்பம்	412
15.	துக்கத்துள் கலக்கத்துள் புண்ணியவதி நீ!	435
16.	தெய்வக் கருணையால் மங்களத் திருமணம்	265
17.	மந்திர நல்லுரையைவிட உயர்ந்த குழந்தை	211
18.	மங்கலப்பாடலை வர்ணிப்பது எங்ஙனம்!	198
19.	இரவில் தோன்றியவருக்குப் பேரொளி	748
20.	மழலையரின் மரணங்களில் வெங்குருதி ஊற்றெடுத்தது	401
21.	ஊர் மக்களுக்கு அனுதவொளியான இயேசு	533
22.	அறிவின் வடிவமான இயேசு புனிதப் பிறவியாம்	419
23.	குருவுக்குத் தீட்சையளித்த யோவான்	485
24.	செதுக்கிய சிற்பம்போல் காட்சியளித்தானோ?	420
25.	சீடர்கள் பன்னிருவரை வாழ்த்துதல்	399
26.	மண்ணுலகோர் உன்னால் மகிழ்ச்சி துய்க்கட்டும்	412
27.	எந்தையின் ஆலயத்தைச் சந்தையாக்கி விடாதீர்கள்	288
28.	என்மக்கள் உன்மக்கள் என்பதேது?	167
29.	சமேரியாவின் மகளே புண்ணியவதிநீ	262
30.	அற்புதமன்று பரமாத்மாவின் கருணையது	386
31.	தீதென எண்ணாமல் அன்பைப் பொழிவாய்!	231
32.	கண்டனர் கண்ணிமைக்காமல் வியப்பான பணிகளை	407

33.	செவிமடுத்தோரின் விமர்சனங்களுக்கு இடமளித்தார்	666
34.	நண்பனின் கொலைச் செய்தி	306
35.	கருணை வள்ளலை மறந்தது	364
36.	உலக மேன்மைக்காகத் தேவமகனுரைத்த கதைகள்	459
37.	கருணை வள்ளலை மறந்தது	281
38.	அன்பு நண்பனே எழுந்து வா	633
39.	இவனுக்கு இணை இத்தரையில் வேறுயாருமிலர்	735
40.	இசுரவேல் அரசனுக்கு வெற்றி உண்டாகட்டும்	461
41.	பஸ்கா பெருவிழாவுக்கு அணியமானது சுகன்யாநகர்	335
42.	யூதாஸ் மனத்துள் இருந்த கனல்	530
43.	பஸ்கா பண்டிகையின் அமுதுண்டார் சீடரொடு	515
44.	நானே அவன் நாசரேத்தின் இயேசு	385
45.	புனித நீராடி புவியைப் புரக்க வந்தவன் நீதானோ!	674
46.	கணவனை இயக்கிய காரிகை புரோகியுவா	357
47.	நானே கலிலேயாவின் மன்னனெனத் தெரியுமா உனக்கு?	194
48.	இயேசு இவர், யூதர்களின் மன்னன்,	517
49.	தேவனே! தேவனே! என்னையேன் கைவிட்டீர்?	533
50.	மரியாளின் அழுகை	257
51.	எமனை வென்றவர் எழுந்து வந்தார்	311
52.	தரிசனம் காட்டிடுவாய் முதலில் எனக்கு	661
53.	வெள்ளித் தேரில் ஏறியது என்ன மாயமோ?	207
	இ)பரஞ்சோதி கிறிஸ்து முனிவர் பருவம்	
54.	பேரொளியின் காட்சி	269
55.	வானுலக் பேரரசின் திறவுகோல்	285
56.	என் மந்தைகளை மேய்க்க வேண்டும்	224
57.	அல்பாயாவின் மத்தேயு எழுந்து வா!	290
58.	இடியின் மைந்தரும் மின்னலின் மறிகளும்	261
59.	உறைந்த கடலின் இறந்த மீன்கள்	255
60.	உலகை உய்விக்கப் புனித நீராடியவர்	390
61.	கண்ட இடங்களில் துண்டு துண்டாக வெட்டினர்	188
62.	அன்பெனும் நூல் வலை	816
63.	கிறிஸ்தவரில்லாத ஊரில்லை ஏசு கிறிஸ்துயில்லாத உலகில்லை	737
64.	ஆதியும் அந்தமும் நானல்ல	552
	மொத்தப் பா அடிகள் 5729+16460+4267=	**26,456**